ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2380/29 - 2024 අප්‍රේල් මස 19 වැනි සිකුරාදා - 2024.04.19

*2380/29 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்***

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட பகுதியையும் அத்தகைய அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள எல்லைகளின் வரையறைகளைக் கொண்டதுமான இப்பகுதியை அபிவிருத்திக்குப் பொருத்தமானதென அபிப்பிராயப்படுவதனால், அத்தகைய பகுதிகளை நகர அபிவிருத்திப் பகுதிகளாக இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
"செத்சிறிபாய", கட்டம்-II,
பத்தரமுல்லை,
2024, ஏப்பிறல் 09.

1A – G 41785 – 19 (2024/04)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*நாமல்ஓய பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட கரங்காவ கிராம அலுவலர் பிரிவினை நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தல்*

*நிரல் I*

*கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்ட, அம்பாறை பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ளதுமான W/891 கரங்காவ கிராம அலுவலர் பிரிவிற்கு உரித்தாகும் நாமல்ஓய பிரதேச சபை அதிகார எல்லையில் அமைந்துள்ள நிரல் II இல் விபரிக்கப்படும் அதன் எல்லைகளும் குறியீடுகளினையும் கொண்டமைந்து சூழப்பட்ட முழுப் பிரதேசத்தினை உள்ளடங்கியதாகும்.*

(**குறிப்பு** :- II இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு சர்வேயர் திணைக்களத்தின் கந்தவல ஸ்ரீ லங்கா ஒருங்கிணைப்புத் தொகுதியினை அடிப்படையாக வைத்துக் காட்டப்பட்டுள்ளது.)

*நிரல் II*

**வடக்கு:**

*கொண்டு வட்டுவான குளத்தின் கிழக்கு எல்லையில் ஆகக்கூடிய வெள்ளப்பெருக்கு எல்லையில் இருந்து மேல் வடகிழக்கு திசையில் அமைந்துள்ள 7.304599, 81.628560 ஒருங்கிணைப்பின் ஆரம்பப் புள்ளி ஆகி 400 மீட்டர் கிழக்குத் திசையினை நோக்கி அமைந்த புள்ளிவரை, அந்த இடத்தில் இருந்து 650 மீட்டர்கள் வடகிழக்குத் திசையினை நோக்கிச் சந்திக்கும் புள்ளிவரை பயணித்து அந்த இடத்தில் இருந்து கிழக்குத் திசையினை நோக்கி நேர்கோடு ஒன்றின் ஊடாக அம்பாறை, மாஓய கண்டி வீதியில் சந்திக்கும் 2/ 3 கொங்ரீட் வடிநீர் குழாயின் மத்திய புள்ளிவரையும், அந்த இடத்தில் இருந்து தென்கிழக்குத் திசையினை நோக்கி கி. மீ. 2 புத்தங்கள புனித பூமி ஊடாக 7.329234, 81.681209 கொண்ட ஒருங்கிணைப்பு வரையும் அந்த இடத்தில் இருந்து தெற்குத் திசையினை நோக்கி கி. மீ. 1.3 திஸ்ஸபுர கிராம அலுவலர் பிரிவின் வடக்குத் திசையினையும் புத்தங்கள கிராம அலுவலர் பிரிவின் மேற்குத் திசையினைச் சந்திக்கும் புள்ளி 7.318134, 81.685263 வரையாகும்.*

**கிழக்கு:**

*கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து ஆரம்பித்து 500 மீட்டர் தென்மேற்குத் திசையினை நோக்கி ரஜவெவ குளத்தின் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ள குளக்கரையின் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ள மத்திய புள்ளி வரையும் அந்த மத்திய புள்ளியின் ஊடாக தென்மேற்குத் திசையினை நோக்கி குளக்கரையின் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ள ஆரம்ப புள்ளிவரை, அந்த இடத்தில் இருந்து மேற்குத் திசையினை நோக்கி குளப் பாதுகாப்பு வலயத்தின் ஆகக்கூடிய வெள்ளப்பெருக்கு எல்லையின் ஊடாக 7.310733, 81.675075 புள்ளி வரையாகும் அந்த இடத்தில் இருந்து மேற்குத் திசையினை நோக்கி பண்டாரநாயக்க மாவத்தையின் மத்திய புள்ளியினை அடையும் 7.310640, 81.674735 ஒருங்கிணைப்பு வரையும், அந்த மத்திய புள்ளியின் ஊடாக மேற்குத் திசையினை நோக்கிப் பயணித்து சந்திக்கும் அம்பாறை-கண்டி வீதியின் மத்திய கோட்டினைச் சந்திக்கும் புள்ளிவரை அந்த மத்திய புள்ளியின் ஊடாக 50 மீட்டர் தெற்குத் திசையினை நோக்கி வீதியின் ஊடாகப் பயணித்து கால்வாயின் மத்திய கோட்டினைச் சந்திக்கும் புள்ளி வரை அந்த இடத்தில் இருந்து தென்மேற்குத் திசையினை நோக்கி அம்பாறை மனநல வைத்தியசாலை வீதியின் மத்திய கோட்டினைச் சந்திக்கும் புள்ளிவரை.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*நிரல் II*

**தெற்கு:**

அந்தப் புள்ளியிலிருந்து அம்பாறை மனநல வைத்தியசாலையின் வீதியின் மத்திய கோட்டின் ஊடாக தென்மேற்குத் திசையினை நோக்கி கரங்காவ கிராம அலுவலர் பிரிவின் மேற்கு எல்லையினைச் சந்திக்கும் 7.284427, 81.645511 ஒருங்கிணைப்பு வரையாகும்.

**மேற்கு:**

கடைசியாகக் குறிப்பிட்ட புள்ளியிலிருந்து கொண்டு வட்டுவான் குளத்தின் கிழக்கு எல்லையின் ஆகக்கூடிய வெள்ளப்பெருக்கு எல்லையின் ஊடாக ஆரம்பப் புள்ளிவரை சூழப்பட்ட பிரதேசமாகும்.

EOG 04-0156